
# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜூலை - ஆகஸ்ட் 2020

இதழ் 01




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

**ஜூலை – ஆகஸ்ட் 2020**

இதழ் 01

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera



**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.
நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email : muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

# ஆசிரியர் பக்கம்

அன்புக்குரிய வாசகர்களே

வணக்கம்!

என் நீண்ட நாளைய கனவொன்று மெய்ப்படும் இவ்வழகிய தருணத்தில், எனக்குப் பக்கபலமாய் நின்று, நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய (உதவும்) அனைத்து நல்லுள்ளங்களுக்கும் முதற்கண், என் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன்,இவ்விலக்கியப் பயணத்தில் என்னுடன் கரம்கோர்க்கும் அனைவரையும் வாழ்த்தி வரவேற்பதுடன், அணி சேர்ந்து கடைசிவரைத் துணை வருவீர்களென்ற நம்பிக்கையில் இவ்விதழின் கன்னிப்பயணத்தை ஆரம்பிக்க விழைகிறேன்.

என் முயற்சிகளில் நல்லவற்றைப் பாராட்டியும், குறைகள் இருப்பின் சுட்டிக்காட்டியும் பேராதரவு நல்க வேண்டுமெனப் பணிவன்புடன் வேண்டி நிற்கும் அதேவேளை, உங்கள் அழகிய படைப்பு(பூ)க்களால் இவ்விலக்கியப் பூங்காவை மணம் கமழச் செய்வீர்களென எதிர்பார்க்கிறேன்.ஏனெனில்திறமையான எழுத்தாள நண்பர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதே இவ்விதழின் பிரதான நோக்கமாகும். ஆகவே, முத்தமிழ் கலசத்தை அழகிய ஆக்கங்களால் நிரப்பி, உங்கள் இலக்கியத் தாகத்தை தணித்துக் கொள்ள வாருங்கள்! அனைவருக்கும் எனது பேரன்பின் நன்றிகள்!

வாழ்க வளத்துடன்!

– சித்தி வஃபீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

## பாவேந்தல் பாலமுனை பாறூக்

ஊரடங்கு இல்லையிது உலக டங்கு!
ஒருசிறிய கிருமியதன் தாக்கத் தாலே
பேரழிவு,பெருந்துயரம்.. பெருமை யெங்கே?

வல்லரசும் புல்லரசாய் மாறிப் போச்சே!
வளர்ந்திட்ட நாடுகளும் வறிய நாடும்
சொல்லொண்ணாத் துயரத்தில் மூழ்கிப் போச்சே!
சொல்லிடத்தான் யாருண்டு? உயிர்கள் போச்சே!

மதமெங்கே நிறமெங்கே சாதி யெங்கே?
மதில்கட்டிப் பிரித்தவர்தம் மமதை யெங்கே?
மார்க்கத்தை வழிமுறையைத் தவற விட்டு
மதம்பிடித் தலைந்திட்ட கூட்ட மெங்கே?
எதுபிழையோ? எதுதவறோ? எதனால் தானோ
இச்சிறிய வைரஸெமைத் தாக்கிற் றிங்கே!

ஒருசிறிய "கொரொணா" வை ஏவி விட்டு
ஓரிறையே எமையெல்லாம் சோதித் தானோ?
ஒன்றுஇறை, ஒன்றுகுலம் என்றிட் டானோ?
ஒன்றுமறி யாதிருந்து வருந்து கின்றோம்!

அகமிருண்டு வாழ்ந்திட்ட வாழ்க்கை யாலோ
அனைவரையும் இடைவெளியில் பிரித்து வைத்தான்?
முகம்மலர்ந்து பேசாத உறவு கண்டோ
முகமூடி மனிதர்களாய் ஆக்கி விட்டான்?

எதுதவறோ எதுபிழையோ அறிந்தோ மில்லை
இறையோனே உனைத்தவிர எவரு மில்லை!
எம்பிழைகள் பொறுத்திடுவாய்,நோயை நீக்கு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் நிலாக்கள்

மழைக் காலம்
சாலையெங்கும் பள்ளம்
ஆயிரம் நிலாக்கள்

அடுப்பங்கரை
இல்லா வீடு
பெண் விடுதலை

இருட்டில் தான்
காணமுடிகிறது
விண்மீன்கள்

கரித் துணியில்
கனன்று கொண்டிருக்கிறது
பெண்ணியம்

தாகம் தணிக்கும்
காலைக் கதிரவன்
பனித் துளி

எல்லோர் வீட்டிலும்
பெண்களுக்கான இடம்
அடுப்பங்கரை

திருடு போனது
மல்லிகைத் தோட்டம்
புகை மூட்டம்

கொதிக்கும் உலை
குமுறும் நெஞ்சம்
பெண் மனம்

செடி கொடி மரம்
பறவை விலங்குகள்
இனிய வாழ்க்கை

ஈர விறகில்
சமையல்
பெண்ணின் வாழ்க்கை

வானத் தோட்டம்
மின்னல் கொடிகள்
விண்மீன் பூக்கள்

பெண்களுக்கு இல்லை
ஆண்களுக்கு உண்டு
ஞாயிற்றுக்கிழமை

பதரைத் தூற்றிடும்
முறத்தின் கைகள்
களத்து மேடு

தாலாட்டு
கேட்க முடியவில்லை
முதியோர் காப்பகம்

தோட்டமெங்கும்
எத்தனை வகைப்பறவைகள்
காலடித் தடங்கள்

ஆணிவேரும்
முடங்கிப் போகிறது
தொட்டிச் செடி

**புதுவைக் குமாரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழியாம் தமிழ்மொழி !!!

செம்மொழிக்கு முகவரியைத் தாரீர்
செப்பேடும் கல்லெழுத்தும் காணீர்.
எம்மொழிக்கும் மூத்தவளாம் ஈங்கே.
எடுத்தியம்பும் இடமன்றோ இஃதே.
நம்மொழியைக் காத்திடலே வேண்டும்.
நரகத்தில் தள்ளுதலே வேண்டா.
வம்புகளும் சூழ்ந்திடாது நம்மை.
வகையான பைந்தமிழே உண்மை!!!

தொல்காப்பி யத்தின்கீழ் நிற்போம்
தொலைந்திடாது மொழிதனையும் காப்போம்.
சொல்வளங்கள் நிறைந்ததுவே பாரீர்.
சொர்க்கமுமே வந்துசேரும் வாரீர்.
வில்தொடுத்தக் காவியத்தைக் கம்பன்
விதந்தோதி வைத்திட்டான் கற்போம்.
வல்லமைதான் உள்ளதடா நன்றாய்.
வளமான தமிழொன்றே கேட்பாய்!!!

பைந்தமிழில் கீதங்கள் பாடு
பைம்பொழிலில் நின்றாங்கே ஆடு.
செந்தமிழில் இயற்றிட்ட நூல்கள்
செப்பிடுமே முதுமொழியாம் என்றே.
எந்நாளும் மாசற்ற சோலை.
எம்மருங்கும் தமிழ்மொழியே மாலை.
இந்நாளில் உரைத்திட்டேன் முன்னே.
இன்பங்கள் சேர்ந்திடுமே பின்னே!!!

பைந்தமிழ்ப் பாமணி சரஸ்வதி பாஸ்கரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லத் துடிக்கும் மனசு

மெட்டுச் சொன்னா
பாட்டு வருமா? - நான்
தட்டிப்பார்த்தேன் தெரியாத்தனமா – அது
கொட்டிப் போனது கொஞ்சமல்லவே... (மெட்டு)

ஆச வெட்டி போகல
ஆள விட்டு நீங்கல
கூரப் பட்டு கேட்கல
கொஞ்சங் கூட சரியில்ல...

வெட்கப்பட்டு நிக்கல
வேகம் ஏதும் எனக்கில்ல
ஓடி நீயும் போனாலும்
தேடி நானும் வருவேனே



கூட்ட விட்டு நீ போன
பாட்ட நானும் மறப்பேனே
காட்ட தேடிப் போவேனே
கதறி நானும் அழுவேனே...

உன்ன நானும் பார்க்கனும்
உள்ளதை எல்லாம் சொல்லனும்
உருப்படியா (நாம) வாழனும்
ஊருக்கு ஏதும் செய்யனும்...

முனைவர் தமிழ்ச்செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்தல்

(தாயின் வயிற்றின் உள்ளேயே மரித்துவிட்ட
என் இரு மகன்களுக்காக...)



*என் அழகிய இரு மகன்களே.*
*நான் மதியிலி அறிவிலி.*
*கவனிக்கத்தானில்லை*
*உங்கள் பிறப்புச் சாசனத்திலிருந்த*
*மரணத்தின் கையொப்பத்தை.*

*ஒன்பது மாத அவஸ்தைகள்*
*முட்டி நின்றன*
*சாக்காட்டின் பெயர் பலகையில் மோதி.*

*உத்தரத்திலிருந்து தொங்கும்*
*தூளிக்குள் இருந்தது*
*பொசுங்கிய கனவின் புகையுருவம்*
*நானறியா வண்ணம்.*

*தாலாட்டுப் பாடலின் வரிகள்உடைந்து*
*பொருள் தொலைந்து*
*நகர இயலாமல் கிடந்தன*
*ஒற்றை ஒற்றைச் சொற்களாய்.*

*உங்கள் அன்னைக்குக்கூட*
*அனுமதியற்ற*
*பித்தின் பெருவெளியில்*
*அலைந்து கொண்டிருக்கிறேன்*
*உங்களுடன் நான்*
*இன்னமும்!*

**கவிஞர் கானப்ரியன்**

# நினைவுக்கரங்களைத் தேடுகிறேன்



இடைவெளிகளின் தூரம் அதிகரிக்கும்போது
இடையில் உயிர்த்திருக்கும் ஈரமாக நினைவுகள்
கடந்துகொண்டிருக்கும் காலத்தைபிடித்துவைக்க
ஆயிரம் முயற்சிகள் கைக்கூடாமலே நகர்கின்றன
தனிமையின் கரங்கள் என்னை தாவியணைக்கும்வேளை
விடுபடும் முயற்சிக்கு உன்நினைவுக்கரங்களைத்தேடுகிறேன்
அன்றுபேசிய அன்பான வார்த்தைகள் உரம்கொடுக்கின்றன
இன்று நீ இல்லாத வலியையும் சேர்த்தே கொடுத்தபடி
வேர்விட்டுக்கிடக்கும் உன் கொடுமையான வார்த்தைகளை
விலக்கும் பிரயத்தனத்தில் கூடுதல் வலுகொடுக்க
உன்னோடிருந்த பொழுதுகளின் நினைவை அழைக்கிறேன்
அவை தூரத்தில் நின்று ஒளிகொடுக்கும் நட்சத்திரங்களாய்
கிடைக்கும் அவ்வொளியின் துணையோடு முயல்கிறேன்
நாட்காட்டியின் தாள்கள் வேகமாகக்கிழிபடுகின்றன
இடைவெளியோ நீள்கிறது எல்லாமுயற்சிகளையும் தாண்டி
இடைவெளிகுறைக்கும் சூட்சுமம் எனக்குப்பிடிபடவேயில்லை

**கவிச்சிகரம் அ. முத்துவிஜயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்களே வெல்வோம்!

## கவிச்சித்தர் பொன்மணிதாசன்

பொங்கும் வங்கமும் போற்றும் மலைகளும்
தங்கச் சுரங்கமும் கொண்டோம் - இங்கு
எங்கும் பசுமையும் எந்திரச் சத்தமும்
பங்கிடும் பாங்குமே கண்டோம்!

சங்கென முத்தென சத்துள மீனென
சமுத்திர மெங்கெனு முண்டு - எழில்
சிங்கம் கரடியும் சிறுத்தை குரங்கதும்
எங்கள் வனத்திலு முண்டு!

சந்தனம் தேக்குகள் சுந்தரத் தென்னைகள்
வந்தனம் செய்யுது மண்ணை - ஒரு
பந்தல் படர்த்திய ஆல்நிறை தோப்புமே
வந்து மயக்குது கண்ணை!

பட்டுப் பருத்திக்கு பஞ்சமிலா வகை
எட்டும் செடிகளின் கூட்டம் - அதில்
பட்டுப் புழுக்களை விட்டு வளர்ப்பதில்
மட்டும் எங்களின் நோட்டம் !

யாதும் நிறைந்த யெம்சேது மடியுடன்
மூதுரை முத்தமிழ் நாடு - அதற்கு
சோதனை வந்தால் சோரோம் சேர்வோம்
சோதிப் பாரவருக்குக் கேடு!

வடக்குத் தெற்கென வஞ்சகப் பேதத்தை
வார்த்தைக்கு கூட சொல்லோம் - கை
உடுக்கை நடுபோல் உள்ளநம் நாடதை
உயர்வித்து நாங்களும் வெல்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “குறும் பா “

எஸ். உதய பாலா

| | |
|---|---|
| பாரதியின் கருப்புவெள்ளை<br>புகைப்படம் காட்டுகிறது<br>பல்வண்ண சிந்தனைகளை... | நிதர்சனப் பொய்சொல்கிறது<br>நேற்றுப் போல்<br>இன்று என்று ஒவ்வொரு துளியும் |
| மாய்ந்துபோன மனிதர்களின்<br>பெயர்களை<br>தாங்கி நிற்கிறது கல்லறை... | தொட்டில் காட்டிய இடைவெளியின்<br>அர்த்தம் புரிந்தது<br>முதியோர் இல்லத்தில் தாய்... |
| கடவுளுக்குத்தான் வெளிச்சம்<br>கண்களை<br>மூடிக்கொள்ளும்போது... | காற்றை நேசித்துச் சென்றேன்<br>கைவிட்டது<br>காய்கின்றேன் சருகாய்... |
| மறந்துபோன தடத்தை<br>காட்டிக்கொடுக்கின்றன<br>காலடிச் சுவடுகள்... | கண்தெரியா பிச்சைக்காரன் தட்டிலே<br>சலசலவென சப்தம்<br>விழுந்தது ஆலங்கட்டி மழை... |
| சிலைகளைக் காணும்போதெல்லாம்<br>ஞாபகம் கோயில் நிர்வாகத்தின்<br>ஆடைக் கட்டுப்பாடு... | ஆளில்லா தெருவிலே<br>யாரையோ காண<br>விடியவிடிய நிற்கிறது அரச மரம்... |
| மேகம் தவழ்ந்தே<br>தேடுகிறது<br>தம் தாயைக் காணோம் என... | கல்தட்டி விட்டதாம்<br>குதித்துக் குதித்துச் செல்கின்றன<br>ஆற்று நீர்... |
| பழக்கமில்லாத பறவைகள்கூட<br>தம் சிறகையசைத்து<br>டாடா சொல்லிப் பறக்கிறது... | அவளைத் தினமும்<br>வரதட்சணை கேட்டு நச்சரிக்கிறேன்<br>புன்னகையாய்... |
| மொழிதெரியா புத்தகத்தை<br>எடுத்த வாசகனாய்<br>தினமும் புரட்டுகிறேன் நாட்களை.. | தலைவிரிக் கோலத்தில் நிற்கின்றன<br>வாழை மரங்கள்<br>காற்றிடம் தம் கற்பை இழந்து... |
| வெயில்பட்டே கறுத்துப்போன<br>மேகம்<br>கண்ணீர் சிந்துகிறது... | தாய்மையின் அன்பு<br>ஊற்றெடுக்கிறது<br>மழலையின் இதழ்களில்... |
| வாழ்வின் ஊசலாட்டம்<br>கடக்க நடந்துகாட்டுகிறாள்<br>சர்க்கஸ் சிறுமி... | புன்னகைக்கும் அழுகைக்கும்<br>வழியாய்<br>வாழ்க்கைத் தடம்விரிக்கிறது... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி பெறு தமிழா

## காரைக்குடி கிருஷ்ணா

எதிர்த்து எதிர்த்து குருதிக் கொடுத்துக் கொடுத்து
மீட்ட சுதந்திரக் காற்றை
மீண்டும் பருகிச் சுவைத்திடு! - தமிழா
மீண்டும் பருகிச் சுவைத்திடு!
கெட்ட செயல்கள் யாவையும் நீ கொல்லு
அந்நிய மொழி அதனைத் தள்ளு
தனித் தமிழில் நூல்கள் அள்ளு
அச்சம் என்பதைத் தள்ளு
அன்பின் வழி நீ நில்லு

செந்தமிழை நீ சிந்தையில் வை
ஹிந்தியைக் கொஞ்சம் தள்ளி வை
சீறும் காளையெனச் சீறு
சீண்டிப் பார்த்தால் நீ மீறு
தாயும் தமிழும் ஒன்றெனக் கூறு
தகர்த்திட நினைத்தால் நிறம் மாறு
தமிழா நீ நிறம் மாறு

அங்கங்களால் மட்டுமே ஆண்பெண் வேறுபாடு
அநீதி பெண்ணுக்கிழைத்தால் நீ கூறுபோடு
அம்மா என்று சொல்ல அவமானமா?
மம்மி என்று சொல்ல அவள் என்ன செத்த பிணமா?

தமிழில் பேசினா தண்டனை குடுக்கிறான்
ஆங்கிலத்தில் பேசினா அறிவாளி என்கிறான்
குல்பி தின்னாலும் செல்பி எடுக்குறான்
குழியில விழுந்தாலும் செல்பி எடுக்றான்
நெகிழிகளால் நிலங்களை மலடாக்கினான்
கட்டிடங்களால் கழனிகளைக் களவாடினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாற்றான் மொழிக்கு மகுடம் ஏனடா?
உற்றவள் உன்னின் உதிரம் தானடா
வீரம் உந்தன் பிறப்படா
வாளும் உந்தன் உறுப்படா
ஓடும் உதிரம் தீயடா
கோடும் உன்னின் தோளடா
வாடும் வாட்டம் ஏனடா?

அடங்கி அடங்கி ஒடுங்கி ஒடுங்கி
இருந்தது போதும்
வற்றுக் குழி நிரப்பி வாழ்ந்தது போதும்
ஆங்கிலம் பேசி அயர்ந்தது போதும்
மதுவைக் குடித்து மயங்கியது போதும்
மண்ணின் மாண்பைக் குலைத்ததும் போதும்
நூறில் ஒருவனாய் இருந்தது போதும்
நூறுக்கும் இருநூறுக்கும் ஓட்டை விற்றது போதும்
உன் ஓட்டை விற்றது போதும்
அலைபேசிச் சூட்டில் அணைந்தது போதும்
புத்தகத் தோப்பில் கொஞ்சம் புதைந்து போ.

எழு எழு விழ விழ எழு
மேலெழும் அலையென எழு
நக்கீரன் வளர்த்த நாற்றங்கால் நீ
எட்டுக் கோடித் தமிழனும்
எழுச்சி கொண்டே ஒருசேர முளைத்தெழு

இளைய சக்தியே
புயலெனப் புறப்படு
புதுரத்தம் பாய புறப்படு
புதுவழி உன்னில் படைத்திடு
என்றே பாரதியும் என்னுள் உரைக்க
வறண்ட நிலத்திற்கு நீர்தூவும் மேகமாய்
நானும் இங்கே அவன்கனவுரைத்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் இலக்கணம்

மரபு மாமணி
**பாவலர் மா.வரதராசன்**

பூங்காவில் என்னவளும் காத்தி ருந்தாள்
புத்துணர்வாய் அவளெதிரில் நான மர்ந்தேன்
தாங்காத காதல்தீ தகித்த தாலே
தழுவுதற்கு முற்பட்டேன் தடுத்தாள் அத்தான்,
பாங்கான இலக்கணத்தின் பாவ லர்நீர்
பலஐயம் எனக்குண்டு தீர்ப்பீர். என்றாள்
மாங்காயை வேண்டிவந்தேன் தேனை யூற்ற
மகிழ்ச்சியிலே திளைத்தவனாய் கேள்கேள் என்றேன்.!

உயிரெழுத்து மெய்யெழுத்து சார்பெ ழுத்தென்.(று.)
உரைக்கின்றார் அவையெனக்குச் சொல்வீர். என்றாள்
உயிரெழுத்து நீ,உன்றன் மெய்நான் நாமும்
ஒன்றாகிச் சார்ந்திருத்தல் சார்பெ ழுத்தாம்
உயிருடலாம் நாமிருவர் இணைந்த பின்பே
உண்டாகும் உயிர்மெய்யே என்றேன்...உன்றன்
உயிர்ப்புள்ள இதயத்தின் சொற்க ளெல்லாம்
உருவாகும் பகையழிக்கும் ஆயுதம் என்றேன்.

மெய்மயக்கம்.? உயிர்மயக்கம்.? புணர்ச்சி.? என்றாள்.
மெல்லியலே என்மீதில் உன்றன் காதல்
மெய்மயக்கம்.! உன்மீதில் என்றன் அன்பே
மேலான உயிர்மயக்கம்...உள்ளம் ஒன்றிப்
பொய்யில்லா அன்போடு தடைய கற்றிப்
புணர்வதுவே புணர்ச்சியென்றேன் நந்தம் காதல்
செய்வினையாம்., அதைத்தடுக்கும் உன்றன் தந்தை
செய்வதுதான் செயப்பாட்டு வினையாம் என்றேன்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தசைசீர் தளையடியும் தொடைகள் பற்றி
    எடுத்துரைப்பீர் என்றிட்டாள் காதல் உன்மேல்
எழுவதுவே எழுத்தாகும் அவ்வெ ழுத்தால்
    என்னுள்ளம் அசைவதுவே அசையாம்..உன்றன்
செழுங்கழுத்தும் பல்வரிசை இடையும் சீராம்
    சேர்த்தென்னைப் பிணைக்கின்றாய் தளையாய்...உன்றன்
முழுவனப்பே அளவான அடியே.! என்மேல்
    முறையின்றிக் கணைதொடுத்தல் தொடையே.! என்றேன்.!

மெல்லினமே வல்லினம்நான் உன்றன் சின்ன
    மின்னலெனும் இடையினத்தால் ஈர்க்கப் பட்டேன்
சொல்லாலே நாரெடுத்துத் தமிழ்ப்பூக் கொண்டு
    தொடுத்திட்டேன் தமிழ்மாலை மகிழ்ச்சி தானே.?
நல்லாளே.! நற்றமிழுக் கிணையே.! வாழ்வில்
    நாமிணையும் பொன்னாளை விரும்பு கின்றேன்
பல்லாண்டு வாழ்கின்ற தமிழைப் போலே
    பல்லோரும் நமைப்போற்ற வாழ்வோம் கண்ணே.!

.....................................................

## ''சுடர்மிகும் அறிவுக்குச் சூட்டினேன் வெண்பா''

## கவி. இரா. கண்ணன்

அறிவைப் புகட்டும் அனைத்தும் தமிழில்
அறத்தைப் புகட்டும் அருட்பா - நெறிவழி
நாலடியார், நீதிநெறி நற்பல் கவிகளும்
காலமும் நிற்கும் கனிந்து

எம்மொழிகற் றாலும் எதுவொன் றறிவாகும்
செம்மொழி யன்றோ சிறப்பாக்கும் - நம்மொழி
தாய்மொழி யன்றோ! தமிழ்மொழி அம்மொழி
ஆய்வோம் அதுதா னறிவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணப்பாடல்

# கவிஞர் ரவீந்திரன் காளிமுத்து

*சந்தக்குழிப்பு :*
தந்தன தான தந்தன தான தந்தன தான தனதானா

நஞ்சையி னோடு முந்திடு மேரை
வெந்திற லாக வுழுவானே
நம்மினம் நாளும் முண்டிடு மாறு
வந்திட நாடி
விளைவானே
புஞ்சையி னூடு முந்திரி வாழை
வந்திடு மாறும் புரிவானே
பொங்கிடு மாசை வந்திடும் போது
நெஞ்சினி னாலும்
நெளிவானே
மிஞ்சின மோர ருந்திடு மாறு
நெஞ்சினி னாலு மிடுவானே
வென்றிடு வோரை வென்றிட
நேரில் அஞ்சிடு மாறு
முயல்வானே
கொஞ்சிடு மாசை வந்தவ ளோடு
நெஞ்சினில் வாழ விழைவானே
கொண்டிடு வாளும் பஞ்சணை
யோடு மந்திர மாக
உழல்வானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடும் விழிச்சுடர்

நிஜன்

அழைக்காமல் வந்தாய்
அனுப்பாமல் போனாய்
மழையா நீ?

போரிடப் போனபோது
பூங்கொத்து கொடுத்தவர்கள்
காதல் என்றதும்
கத்தியோடு வருகிறார்கள்.
புறப்பட்டுவிட்டது போல
ஒரு கூட்டம்
நீரை
நெருப்பால் மூட..

காதலிக்கப்படுவது
ஒரு சுகம்.
காதலிக்கப்படுவதாக
நினைத்துக்கொள்வது
இன்னொரு சுகம்.

நினைக்கும் நேரம்
வருவதில்லை வசந்தம்.
இப்பொழுதெல்லாம்
நீயும் வசந்தமாய்.

காதோடசையும் குண்டு
கணுக்கால் காட்டும் கொலுசு
முன்னுரிமை கேட்கும் முன்சடை
இதழ்விரித்துக்காட்டும் சிரிப்பு..
மலை நதி தாண்டி
மைல் பல கடந்தும்
இமையின் உட்புறம்
இருக்கை வாங்கும்
உன் நினைவுகள்...

வந்தாள்
அம்மா நினைப்பு வந்தது.
போய்விட்டாள்.
வந்தாள்
அப்பா நினைப்பு வந்தது.
போய்விட்டாள்.
எப்போ வருவாள்?
யார் நினைப்பும்
இல்லாதவளாய்.

வாங்கிவரும் பூவால்
என் வாசல் அலங்கரிக்கும்
அவள்
என்ன ஆனாள்
எனத்தெரியவில்லை.
இப்போது
நானே தினமும்
பூ மார்க்கெட் போய்வருகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிஞர் பாலக்கிருட்டிணன்**

## பகட்டுப் பள்ளிகள்

செல்வச் செழிப்பில் பள்ளிகள்
ஆடம்பரத்தை ஆடையாய் உடுத்த
பிள்ளைகளின் பெற்றோர்கள்
கசக்கிப் பிழியப் படுகின்றனர்.

## பண பேரம்

வாய்மையுடன் எழுதிய தீர்ப்புக்கள்
வளைக்கப்பட்டன வசதிக்கேற்ப
இங்கொன்றும் அங்கொன்றுமாய்
பண ஆசையின் பேரத்தால்.

## சேவை - தேவை

சேவை செய்வோம் தேவை அறிந்து
வேண்டுவோர்க்கு வேண்டுமளவு
நேரமறிந்து நிலைமை உணர்ந்து
முடிந்தவரை முடிந்தவர்க்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று பூத்த பூ நீயா?



அட என்று பூத்தாய்
தாழம்பூவே நீ!
அட என்று பூத்தாய்
அல்லியே நீ!
அட என்று பூத்தாய்
மரிக்கொழுந்தே நீ!
அட என்று பூத்தாய்
முல்லையே நீ
அட என்று பூத்தாய்
செவ்வந்தியே நீ!

இன்றே பூத்தேன்
என்றும் வாட மட்டேன்!

ஏன்?
ஏன்?

சித்திரத்து நிலவாக
சிந்தையும் தடுமாறாமல்
சில்லறை முத்தை சூட்டிக்கொண்டு
சிங்கத்தில் நெஞ்சத்தில்
சோர்வில் சாய்வே
செங்கதிர் தொடுதிரையே!
செங்கோலை தூக்கிக்கொண்டு
இம்மண்ணில் வந்தாயோ!
காற்றலையாக தான்
குரலலையாக தான்

உன்னை வாழ்த்தி வரவேற்க தான்
பூவையர் கூட்டு வருகை!!

**ஸ்டெல்லாமேரி எம். ஜே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கிறேன்...

**ஃபாத்திமா**
ஷார்ஜா.

நிதானமாக எழுந்தார் ராகவன். பொறுமையாக மனைவி கொடுத்த காஃபியை ருசித்துப் பருகினார். பிள்ளைகளின் அறைக்குள் நுழைந்தார். அவர்களுக்கு நடுவே படுத்துக் கொண்டார். அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டான் மூத்தவன். வயிற்றில் கை போட்டுக் கொண்டு அவர் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டான் இளையவன்.

இருவரும் ஒரே நேரத்தில் கண் விழித்துப் பார்த்தார்கள். யாரின் கழுத்தைப் பிடித்திருக்கிறோம்? யாரின் வயிற்றில் கை போட்டிருக்கிறோம்?

“அப்ப்ப்பா...” இந்த உணர்வு, அது தந்த சுகங்கள், இதுக்காக காத்திருந்த ஏக்கங்கள் இன்னும் எத்தனையோ... இந்த மகன்களின் நெஞ்சுக்குள்.

பத்து நாட்களுக்கு முன் பணம், பணம் எனப் பறந்தவர். எப்போதும் பிசி, பிசி என ஓடிய பிசினஸ் மேன். கடமைக்கு காஃபி பருகிவிட்டு, அவசரத்தில் குளித்துவிட்டு, அரை குறையாக சாப்பிட்டு, அலுவலகம் நோக்கி விரைந்து, நடுநிசியில் வீடுவந்து...

இப்படியே சுழன்று கொண்டிருந்த ராகவனின் உலகத்தில் மனைவி, குழந்தைகள் என்ற எண்ணங்களெல்லாம் தூரமாகவே இருந்தது.

இப்போது இந்த தனிமை, குடும்பத்தினரோடு தனித்திருந்தே ஆக வேண்டிய சூழ்நிலை... முன்னோக்கி முழுவேகத்தில் பறந்த அவரது வாழ்க்கை பறவை தன்சிறகுகளை இறுகக் கட்டி ஊரடங்கு உத்தரவு வேடனால் குடும்ப வலைக்குள் நுழைந்து கொண்டது.



“என்னங்க அடுத்தவாரம் ஸ்கூலில் ஆண்டுவிழா. பிள்ளைகள் டான்ஸ், ட்ராமாவில் சேர்ந்திருக்காங்க. எல்லோருடைய பேரன்ட்ஸும் வராங்களாம். நாமளும் போய்ட்டு வரணும்.” “இல்லை சுதா, அடுத்தவாரம் ஃபாரின் கஸ்டமர்ஸ் வராங்க அதனால் வரமுடியாது. நீயே பார்த்துக்க”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுக்காரர்கள் வீட்டுத் திருமணம், நண்பர்களின் பிறந்தநாள் அழைப்புகள், வீடு குடிபுகும் விசேஷங்கள், மட்டுமல்லாது தன் மனைவி, குழந்தைகளின் பிறந்தநாள்கள், தனது திருமணநாள் எதிலுமே கலந்து கொள்ளாமல் பணம் மட்டுமே குறிக்கோளாக வாழ்ந்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? மறுகிய மனதுடன் தன் மனைவி குழந்தைகளுடன் உருகிய தங்கமாய் ஒட்டிக் கொண்டு நாள்களை நகர்த்தத் தொடங்கினார் ராகவன்.

இழந்த ஆண்டுவிழாக்களை, கல்யாணங்களை, விசேஷங்களை, பிறந்த தினங்களை தேடுகிறது மனம்.வருடம் முழுவதும் பணம் தராத நிம்மதி, திருப்தி, மகிழ்ச்சியை இந்தத் தனிமை நாட்கள் எனக்கு உணர்த்திவிட்டதே! கொரோனா அழிந்தவுடன் குடும்பத்தோடு எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும். கொரோனா விரைவில் ஒழிந்து போக குடும்பத்துடன் தனியாக பிரார்த்தனையோடு காத்திருக்கிறார்.

---



## வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்...

இந்தியா
ஒற்றைத் துணியல்ல
ஒட்டுத்துணி
பல வண்ணங்களால் ஆனது!

இந்தியா
இராமனின் வில் அல்ல
வானவில்
பல வண்ணங்களால் ஆனது!

இந்தியா
மாட்டுத் தொழுவம் அல்ல
காட்டு விலங்குகளின் கூட்டம்
பல வண்ணங்களால் ஆனது!

இந்தியா
பூணூல் புரளும் பொன் மார்பு அல்ல
மார்கழி வீதி
பல வண்ணங்களால் ஆனது!

இந்தியா
கோவணமில்லாக் கும்பமேளா அல்ல
கோலாகலப் பொங்கல்
பல வண்ணங்களால் ஆனது!

இந்தியா
ஒற்றைப் பண்பாட்டுக் கூடாரமல்ல
கற்றைப் பண்பாடுகளின் கல்வீடு
பல வண்ணங்களால் ஆனது!

இங்கே
வண்ணங்கள் வேற்றுமைப் படலாம்
ஆனால்
எண்ணங்களில்
ஒற்றுமைப்படலம் தான்
ஓங்கியுள்ளது!

பன்முகத்தன்மையே
இந்தியாவின்
பாதுகாப்பு வளையம்!

புதிய தேசபக்தர்களே...
வளையத்தை உடைக்காதீர்
ஐ நா வில்
புதிய கொடிகளைப்
பறக்க வைக்காதீர்!

- வெற்றிப்பேரொளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீர் நண்பன்

அப்படியென்ன
மாய கண்ணாடியோ தெரியவில்லை
நினைவுகளை அள்ளி வீசும்
இந்த தேனீர்க்கோப்பைகளில்

ஆவி பறக்க அணைத்துக் கொண்டே
விரல்கள் ஸ்பரிசிக்க இதயம் இதமாகி
அத்தனை நினைவுகளையும் கண்முன்னே
காட்சிகளாக்கி விடுகின்றது.

தனித்தமர்ந்த இந்த தேனீர் இடைவெளியில்
மனத்துக்குப் பிடித்த இசையோடு
இதய வருடலோடு  ஒரு பாடல் ஒலிக்க
இந்த உலகமே மறந்து
மாயங்கள் உள்வாங்கிக் கொள்கின்றன.

ஒவ்வொரு மிடறும் ஒவ்வொரு
காட்சிகளை வர்ணமூட்டிவிட
தொண்டைக்குழி நனைத்த இனிப்பின்
இன்பங்கள் எங்கும் வென்றிட
சற்றும் தாமதியாமல் உள்ளம் உருகிவிட
இவையனைத்தும் நிகழ்காலமா இறந்தகாலமா
என நினைத்து  சற்று தடுமாறிட

எத்தனை இன்பம் எத்தனை இன்பம்
மதுவில் மயங்கும் மானிடர்களே
தேனீரின் தனித்த தனிமை தரும் மயக்கம்
உங்கள் மதுவில் இல்லை.

இது ஒரு தனி அனுபவம்தான்
சிந்திக்கவும் இதயம்
அமைதியுறவும், பல முடிவுகளுக்கு
முற்றுப்புள்ளியிடவும் ,
சில ஆரம்பங்களுக்கு
அஸ்திவாரமிடவும் தவறாது முயற்சித்திடு!



**ரிம்ஸா டீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்னை

என்றுப் பிறந்தாள்,
எங்கு வளர்ந்தாள்
அறிந்தவர் யார்தான்
இங்குளர்..?!

எங்கும் நிறைந்து
ஆளும் அவளை
முழுதாய் யார்தான்
கண்தொழர்?!

உலகெங்கும் ஓதும்
ஒலியில் எல்லாம்
அவள் தீண்டல்
இல்லாதிருக்குமோ?!

நிலைக்கும்
கலை யாவையும்
அவளின் நினைவே
மெல்ல எழுப்புமோ?!

மலைக்க வைக்கும்
வெறும் மூச்சினிலே
என் சிந்தை
அவளே மீட்டுவாள்..!

சிறகும் அவளே
தந்து என்னை
பறக்கும் நிலைக்கு
தள்ளுவாள்..!

களைப்பினிலும்
சிலிர்ப்புத் தரும்
கன்னித் தமிழே
எம்மொழி..!

நிலைப்பினிலும்
பெறும் உயர்வுப்பெற்று
நிற்பதுவே
அவள் வழி..!

பாலு தியாகராஜன்,
கோவை.



## உயிரில் கலந்த உணர்வே

தயிரில் மறைந்த வெண்ணெய் என
தங்கத்தில் கலந்திடும் செம்பு எனவும்
இதயத்தில் நிறைந்தவளே என் காதலியே
என்னுயிரில் கலந்திட்ட உள் உணர்வே

இதய ஊஞ்சலில் இடையறாது ஆடுகிறாய்
உதயமான காதல் மேடையில் பாடுகிறாய்
சதயத் திருவிழாவிலே சந்தித்த நாளிது
இதமான அந்தி மாலையாய் ஆக்குவோமே

புரிதலில் விளைந்த புனிதமான காதலிது
தெரிந்த நாள்முதல் விரியும் நேசமிது
பிரியாமல் பிணைகின்ற பிம்பங்கள் இது
விரிகின்ற காதல் முறையான வாழ்வாகுமே

உரமான உண்மைக் காதல் உணர்வானது
தரமான உள்ளங்களின் இணைப்பில் ஆனது
வரமாக வருகின்ற வரவாக நிறைவானது
மரபிலும் மாண்பிலும் உருவான காதலிது

கண்ணின் இமையாகக் காவல் இருப்பேன்
பெண்ணின் சுதந்திரத்தில் கவனம் வைப்பேன்
எண்ணிலடங்கா ஏற்றங்களின் ஏணி ஆவேன்
மண்ணின் மாண்பாகக் காதல் வளர்ப்பேனே

கவிஞர் ராம்க்ருஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நுங்கின் சிறப்புகள்...

- ஆக்ஸ்போர்டு சுரேஷ்

கோடைக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றது, நுங்கு.

நுங்கு மிகவும் சுவையாக இருப்பது மட்டுமின்றி, இதில் எண்ணற்ற நன்மைகள் நிறைந்துள்ளது.

குறிப்பாக கோடையில் உடலுக்கு வேண்டிய நீர்ச்சத்துக்களை இது தன்னுள் அதிகம் உள்ளடக்கியுள்ளது.

☐ உடலின் கனிமச்சத்து மற்றும் சர்க்கரையின் அளவை சீராக வைத்து, சுறுசுறுப்புடன் செயல்படுவதற்கு நுங்கு பெரிதும் உதவியாக இருக்கிறது. அதுமட்டுமின்றி, இதில் வைட்டமின் பி, இரும்புச்சத்து, கால்சியம், ஜிங்க், பொட்டாசியம் போன்ற பல்வேறு சத்துக்களும் உள்ளன.

☐ இதில் அடங்கியுள்ள சத்துக்கள் உடலுக்கு ஆரோக்கியத்தை தருகின்றது. மேலும் இது உடல்வெப்பத்தை தணிக்கும் ஆற்றல் உடையது. கோடைக்காலத்தில் குளிர்பானத்தை அருந்துவதை விட நுங்கு சாப்பிடுவது உடல்நலத்திற்கு மிகவும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுங்கின் பயன்கள் :

☐ நுங்கு வெயிலின் தாக்கத்தை குறைக்க மனிதனுக்கு கிடைத்த அருமருந்தாகும்.

☐ நுங்கு வெயில் காலத்தில் ஏற்படும் அம்மை நோய்களை தடுத்து உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தந்து உடலை சுறுசுறுப்பாக்கும்.

☐ பனை நுங்கிற்கு கொழுப்பை கட்டுப்படுத்தி உடல் எடையை குறைக்கும் ஆற்றல் உண்டு.

☐ பனை நுங்கில் உள்ள நீரானது வயிற்றை நிரப்பி பசியை தூண்டுவதோடு, மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப்போக்கு இரண்டிற்குமே மருந்தாக பயன்படுகிறது.

☐ உடல் உஷ்ணத்தால் அவதிப்படுபவர்களுக்கு எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. பனை நுங்கை சாப்பிட்டால் அவர்கள் தாகம் அடங்கும்.

☐ கர்ப்பிணிகள் நுங்கு சாப்பிட்டால், செரிமானம் அதிகரிப்பதுடன், மலச்சிக்கல் மற்றும் அசிடிட்டி போன்ற பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம்.

☐ இரத்தசோகை உள்ளவர்களுக்கு நுங்கு நல்ல மருந்தாகும்.

☐ நுங்கில் காணப்படும் அந்த்யூசைன் எனும் இரசாயனம் பெண்களுக்கு மார்பக புற்றுநோய் கட்டிகள் வருவதை தடுக்கும் சக்தி கொண்டது.

☐ பனை மரத்தில் இருந்து கிடைக்கும் நுங்கு நீரை தொடர்ந்து சாப்பிட்டு வர கோடைக்காலத்தில் ஏற்படும் வேர்க்குரு நீங்கும்.

☐ நுங்கு, குடல் புண்ணை ஆற்றும் தன்மை உடையது.


☐ கோடையில் வெயில் கொப்பளம் வராமல் தடுக்க, நுங்கு சாப்பிடுவது அவசியம்.

☐ பெரியோர்கள், இளம் நுங்கினை மேல்தோல் நீக்காமல் சாப்பிடுவது மிகவும் நல்லது. மேலும் இந்த நுங்கின் நீரை தடவினால் வேர்க்குரு மறையும்.

☐ நுங்கு அதிகம் சாப்பிட்டால், உடலின் நீர்ச்சத்து அதிகரித்து, வெயிலினால் ஏற்படும் மயக்கம் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தூரப் பயணம்



ஜன்னலோர இருக்கை.
சாலை நெடுகிலும் என் ஓரப்பார்வை
அத்தனை அழகையும் அள்ளிப் பருக ,
நினைவுகளோ அத்தனை வனப்பையும்
கட்டுக்கட்டாய் அள்ளிச் சேர்த்தன,
என் இதய நூலகத்தில்
கவிதைப் புத்தகங்களாய்.
தேன் சொட்டும் செம்மாதுளை
முத்துக்களாய் அவை
மனதுக்குள் பரவிக் கிடக்க,
சின்னச்சிட்டுக்குச் சிறகு முளைத்த
மகிழ்ச்சியாய் மனவானில்
உற்சாகமாய் பறக்க,
உள்ளோடும் எண்ணத்தில்
சிறு நெருடல், ஒரு வலி.
என் பக்கமிருந்து பயணிக்க
நீயில்லையெனும் ஏக்கம்,
பெருமூச்சாய் காற்றில்
மெல்லக் கரைய என் வசமில்லை நான்.

- ஃபாயிஸா ஷஸ்மா

---

# ஆசை

விஜிதா

கோடைக் காலத்தின் வெப்பத் தகிப்பில்
நா வரளும் பொழுதுகளில்
உன் ஈரமுத்தம் பெற்று தாகம் தணிக்க ஆசை.

இலையுதிர்க் காலமொன்றில் அந்தி மயங்கும் வேளை
சாலைகளில் பாய் விரிக்கும் வண்ண இலைகளை ரசித்தபடி
உன் விரல்கள் கோர்த்தே உன் தோள் சாய்ந்து
நெடுந்தூரம் பயணிக்க ஆசை.

கார்காலக் கருமேகம் மழையாய் மண்ணைத் தொடுமுன்
உன் அன்புமழையில் குளித்திட ஆசை.

கடும் பனிக்காலம் பூமியைப் போர்க்கும் முன்
உன்னைப் போர்த்துக் கொண்டு உறங்க ஆசை.

இளவேனிற்காலத்தில் பூமர நிழலில், பூக்களின் பஞ்சணையில்
உனக்குள் நான் தொலைய கொள்ளை ஆசை.

காற்றில்லாக் கிரகமொன்றில் உன்னிமைகள் கவரி வீச
உன் சுவாசக் காற்றில்
நித்தம் நான் உயிர்க்க ஆசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் கல்வியும் சமூக மாற்றமும்

மணிக்கவிக்கூ நஸீரா எஸ். ஆபிதீன்

பெண்ணாகப் பிறந்ததினால்
பேருவகை கொள் பெண்ணே! - இரு
கண்ணெனவே கல்வியினை
கற்றுணர்ந்து ஒழுகு.
எண்ணெழுத்து கற்பதிலும்
பெண்ணுக்கு தடையில்லை
எண்ணமதில் தூய்மை கொண்டு
ஏற்றம் பல காண்பாய்.

கல்வியே செல்வமெனக்
கருத்தினிலே கொண்டு
கரைகாணாக் கல்விக்காய்
கடல் தாண்டிச் செல்வாய்.
இறையச்சம் என்றுமே
அகமதிலே கொண்டு
மறையோனின் வழியதனில்
மகத்துவமாய் வாழ்வாய்.

சிங்களவர் தமிழரும்
கிறிஸ்தவர் முஸ்லீம்களும்
சேர்ந்திணைந்து வாழுமெம்
இலங்கைத் திருநாடு.
என்றென்றும் ஒற்றுமையாய்
வாழ்ந்திடவே நீயும்
ஏற்ற வழி கண்டதனை
எடுத்து வாழ் பெண்ணே!

ஏட்டுக்கல்வி கற்றதனால்
போட்டிகளும் அதிகம்
நாட்டினிலே தேவையது
வாழ்க்கைக்கான கல்வி
பாலர் பள்ளி முதற்கொண்டு
கலாசாலை வாழ்க்கை
பட்டம் பல பெற்றாலும்
பண்புடனே வாழு.

வீட்டாட்சி முதற்கொண்டு
நாட்டினையும் ஆள
ஏற்றிடுவாய் பெரும் சபதம்
மாற்றிடவே பேதம்.

பெற்றோரைப் பேணுவது
பெரும் பேறு பெண்ணே!
பெற்றெடுத்த பிள்ளைகளும்
உயர்ந்திடவே உழைப்பாய்.

பட்டங்கள் பதவிகள்
எது வந்த போதும்
பாங்காக மனையையும்
பேணுதல் வேண்டும்.
ஆணைவிடப் பெண்களுக்கே
மனவலிமை அதிகம்
ஆனாலும் அகமதிலே
அகந்தை கொள்ளாதே.

சமுதாய ஒற்றுமைக்காய்
வீறு நடை போடு
வீட்டினிலும் நாட்டினிலும்
அமைதி விதை போடு.
அழகிய இல்லமதை
அன்பினால் ஆளு.
பெரியோரும் சிறியோரும்
அகமகிழ வாழு.

வீட்டினிலும் பெரும்பணி
போசாக்கு உணவு
சுற்றுப்புற சுத்தமும்
அழகுறவும் அமைப்பாய்.
அண்டை அயலாருடன்
அன்பொழுகப் பழகி
ஒற்றுமையை நிலைநாட்ட
உறுதியுடன் உழைப்பாய்.

கல்விக்கு கரையில்லை
கடுகளவே கற்றோம்.
அறிவுக்கு எல்லையில்லை - நாம்
அறிந்தது துளியளவே.
உயிர் வாழும் காலம் வரை- ஈருலக
கல்வியினைத் தேடி
இம்மையிலும் மறுமையிலும்
ஏற்றம் பெறுவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகள்



பசிக்கு உணவாகி
ஆன்மாவில்
தேன் வார்க்கும்
அம்மாவின் அன்பு வார்த்தைகள்.

துயரிருள் சூழ்ந்த
சோதனைக் காலங்களில்
''நானிருக்கிறேன்'' என்று
நாடி நரம்புகளில்
புத்துணர்வு ஒளியேற்றும்
அன்பு மனைவியின்
இனிப்பு வார்த்தைகள்.

துவண்டு விழுகையில்
தோள் கொடுத்து
புதிய. பாதையில்
பூக்களாய் மணக்கும்
தோழனின் ஆறுதல் வார்த்தைகள்.

''எல்லாம் எங்களுக்கே''
என்பதை மாற்றி
''எல்லாம் உங்களுக்கே''
என்று பொய்யுரைத்து
வாக்குகளை அபகரிக்கும்
அரசியல் வாதிகளின்
அவ(மி)ல. வார்த்தைகள்.

தெய்வங்கள்
போலிருக்கும் வார்த்தைகளை
தெருப் புழுதியாக்கி
விடுகிறார்கள்...
கையாளத் தெரியாத
கரடுமுரடான. மனிதர்கள்.

மௌனம் எனும்
மலர்ப் படுக்கையில்
வார்த்தைகளை
கிடத்தி வைத்திருந்தால்
இதயத்தைச் சுற்றிலும்
ஏகாந்தம் மொய்த்திருக்கும்.

சிறகுகளின்றி பறந்து
மோனவெளியில் அலைந்து
முக்தி அடைவதற்குள்
மூர்ச்சையாகி விடுகின்றன...
வார்த்தைகள்.

**ஜென்ஸி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணச் சுற்றுலா

## S.ஜெர்லின் பிரீமா

நாம் அனைவருமே இறைவனால் படைக்கப்பட்டு இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுலா பயணிகள். சுற்றுலா செல்லும் யாரும் சென்ற இடத்திலையே தங்கி விடுவது இல்லையே. எங்கிருந்து கிளம்பினோமோ அவ்விடத்திற்கே திரும்பிச் செல்வோம். அதுப்போலவே இவ்வுலக சுற்றுலா வாழ்க்கை முடிந்ததும் நம்மைப் படைத்து அனுப்பியவரிடமே திரும்பி செல்வோம். நாம் சுற்றுலா சென்ற இடத்தையும் அங்குள்ள பொருட்களையும் எப்படி உரிமைக் கொண்டாட முடியாதோ, அதுப்போல இவ்வுலக சுற்றுலா வாழ்க்கை முடித்து படைத்தவனிடம் திரும்பிச் செல்லும் போதும் எதையும் எடுத்துச் செல்ல முடியாது. கடவுள் நம்மை எவ்வாறு புதுப் பிறப்பாக, தூய்மையான உள்ளம் படைத்தவர்களாக இவ்வுலகிற்கு அனுப்பினாரோ அதேப் போன்ற புதுப்பொலிவுடன் தூய உள்ளத்தோராய் அவரைச் சென்றடைய வேண்டும். இனால், நாம் சுமந்து செல்வது என்னவோ பாவச்சுமைகளைத்தான்.

நமக்கு முன் இவ்வுலகிற்கு கடவுளால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகள் பலர் துன்பத்தினாலும், பலவிதமான சோதனைகளினாலும், நோய்களினாலும் பாதிக்கப்பட்டு தவறான பாதையில் செல்பவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு துன்பமான வேளையில் ஆறுதலாகவும், நோயால் வாடுபவர்களுக்கு உதவிக் கரம் நீட்டவும் தவறான பாதையில் செல்வோரை நல் அறிவாலும், நற் சிந்தனைகளாலும், நல்வழிப் படுத்தவும், நம்மைத் தொடர்ந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கு முன் மாதிரியான வாழ்க்கை வாழவுமே கடவுள் நம்மை இவ்வுலகிற்கு அனுப்புகிறார்.

ஆனால், நாம் பணம், பதவி, பட்டம், பெயர், புகழுக்காக இவ்வுலக முன்னாள் பயணிகளின் மனதையும், நம்மைத் தொடர்ந்து வரும் சுற்றுலா பயணிகளின் நற்சிந்தனைகளையும் உடைத்து அவர்களது மனதில் ஆறாத வடுவையும், தீய எண்ணங்களையும் விதைக்கின்றோம்.

இந்த உலகில் உள்ள எதுவும் நமக்கு சொந்தமில்லை என்பது நாம் மண்ணுடன் போகும் போது மட்டுமே நமக்கு தெரிகிறது. அதற்கு முன் நம் அறிவுக்கு தெரிந்தாலும் நம் மனம் அதை ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் நாம் வாழும் போது, இது எனக்கு சொந்தம், அவை எனக்குரியவை, இவை எனக்குரியவை என அனைத்தின் மீதும் உரிமைக் கொண்டாடுகின்றோம். ஆனால், இது எதுவும் இறுதியில் நம்முடன் வருவதும் இல்லை, நம்மால் அவற்றை எடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவும் இயலாது. நாம் வாழும் இவ்வுலக வாழ்க்கையில் அன்புடன் ஒருவர் மற்றவருக்கு உதவிகள் செய்து வாழலாம். ஆனால், நாம் யாருக்கும் எந்த உதவியும் செய்யாதவர்களாய் ஏதோ பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று இருக்கின்றோம். இதை மாற்றி நாம் பிறந்ததற்கான நோக்கத்தை அறிந்துச் செயல்பட வேண்டும்.

உன்னைப் படைத்தவர் உன்னைப் படைத்தப் பொழுதே உன் வாழ்வுக்கான நோக்கத்தை உருவாக்கியிருப்பார். ஆம், ஒவ்வொரு மனிதனின் பிறப்பிற்கும் ஒவ்வொரு நோக்கம் இருக்கிறது. அந்த நோக் கத்தை அவனவன் அறிந்து அவனவனே நிறைவேற்ற வேண்டும். அதற்காகவே நாம் படைக்கப்பட்டோம். நம் இடத்தை நம்மால் மட்டுமே நிறைவு செய்ய முடியும்.

பிறப்பு என்பது பலருக்கும் வரலாற்றில் ஒரு நிகழ்வு. ஒரு சிலருக்கோ பிறப்பே வரலாறுத்தான். நிரந்தரமாக நாம் யாருக்கும் எதையும் கொடுக்க முடியாது. நமக்கும் நிரந்தரமாக யாரும் எதையும் தர முடியாது. எல்லாமே தற்காலிகமானதுதான். இந்தத் தற்காலிகமான உலகில் நாம் மற்றவர்களுக்கு உதவுவதால் எதையும் இழந்து விடப்போவது இல்லை. ஏனெனில் எல்லாம் எல்லாருக்கும் உரியது. ஒவ்வொருவருக்குமே பிறந்த நாள் வெறும் நாளாக மட்டுமல்லாமல் நல்லச் செயல் செய்ய பிறந்த ஆரம்பமாக இருக்க வேண்டும். பிறக்கும் போது எதையும் கொண்டு வருவது இல்லை. மற்றவருக்கு உதவுவதால் எதையும் இழந்துவிடப் போவதும் இல்லை.



# நீல வண்ண அழகி

நீல வண்ண அழகினிலே
நித்தம் வந்தே ஆடுகிறாய்
சாலம் செய்துஆட்டுகிறாய்
சாடை என்ன காட்டுகிறாய்
வேலன் வந்து பார்த்திட்டால்
வேண்டி விரும்பிச் சென்றிடுவாய்
காலன் போல பறித்திட்டாய்
காத்தி ருக்க வந்திடுவாய்

- தென்றல் கவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ.ப.ஜெ.அப்துல் கலாம்
## 1931 - 2015

ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்களின் வரலாறு சிறப்பு மிக்க ஒன்றாகும். 1931 அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் பிறந்து, திருச்சியில் உள்ள புனித ஜோசப் கல்லூரியில் இயற்பியலும், மெட்ராஸ் தொழில் நுட்பக் கல்லூரியில் விண்வெளி பொறியியலும் கற்று, முதுகலைப் பட்டமும் பெற்றார்.

கலாம் இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்பதற்கு முன், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலும் (DRDO) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் (ISRO) விண்வெளிப் பொறியாளராகப் பணியாற்றினார்.

கலாம் தமிழ்க்கவிதை எழுதுவதிலும்,வீணை வாசிப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார்.

40 பல்கலைக்கழகங்கள் வழங்கிய மதிப்புறு முனைவர் பட்டங்களையும் பெற்றுள்ளார். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தில் சிறப்பாகப் பணியாற்றியமைக்காகவும், அரசின் விஞ்ஞான ஆலோசகராகப் பணியாற்றிய மைக்காகவும் இந்திய அரசு 1981 ஆம் ஆண்டில் ‘பத்ம பூஷன்’ விருதும் 1990 ஆம் ஆண்டில் ‘பத்ம விபூஷன்’ விருதும் வழங்கி கௌரவித்தது. அது மட்டுமல்ல,




இந்தியாவின் அதி உயரிய விருதான ‘பாரத ரத்னா’ விருதையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையில், அப்துல் கலாமின் 79 வது பிறந்த நாளில், இவரது பிறந்தநாளை உலக மாணவர் தினமாகப் பிரகடனப் படுத்தியது.

அவரின் பிறந்த வீட்டில், (இராமேஸ்வரம் மசூதி தெரு) மிஷன் ஒஃப் லைஃப் கலரி (Mission of life gallery) என்ற பெயரில், இவர் பெற்ற விருதுகள், முக்கிய நிகழ்வுகளில் இவர் பங்கேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படங்கள், அவர் எழுதிய நூல்கள் என்பன காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. ஏறத்தாழ 9 நூல்கள் எழுதியிருக்கும் கலாமின் 'அக்கினிச் சிறகுகள்' மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றதாகும். மேலும், அவரின் நூல்களின் மொழிப்பெயர்ப்புப் பதிப்புகளுக்குத் தென் கொரியாவில் நல்ல வரவேற்பு உள்ளது.

2002 ஆம் ஆண்டில், இந்தியாவின் 11வது குடியரசுத் தலை வராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, 2007 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

பல பல்கலைக் கழகங்களின் பேராசிரியராகவும், இந்திய மேலாண்மை நிறுவனங்களில் ஒரு வருகைப் பேராசிரியராகவும், இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனத்தில் 'வேந்தர்' ஆகவும் பணியாற்றியதோடு சோமாலியாவில் உள்ள பல கல்வி ஆராய்ச்சி நிறுவனங்களில் துணை வருகைப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

ஒரு அறிவியலாளராக, விஞ்ஞானியாக, பேராசிரியராக, அரசியல்வாதியாக, எழுத்தாளராக இப்படிப் பல்வேறு துறைகளில் வரலாறு படைத்தவரின் இதயம், 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி தன் துடிப்பை நிறுத்திக் கொண்டது. இந்த அறிவியலாளர் வகுத்துக் கொடுத்த திட்டங்கள், இன்றும் மாணவர்களினதும் இந்திய நாட்டினதும் மேம்பாட்டுக்கு வழிகோலுகின்றன என்றால் மிகையாகாது.

**- சித்தி வஃபீரா**

---

# கனவெனச் சுட்டாள்!

சிட்டுமுக வெட்டுவிழி
எட்டியெனைச் சுட்டாள்!
தட்டுநிறை மொட்டுஇதழ்
கட்டவிழ விட்டாள்!

ஒட்டிவிடும் அட்டையவள்
கொட்டுமெழில் சிட்டாள்!
வட்டியுடன் பெட்டிநிறை
கொட்டிநகை யிட்டாள்!

சட்டெனவும் கட்டழகி
மெட்டசைய விட்டாள்!
அட்டியிலை தொட்டுவிடக்
கட்டளையு மிட்டாள்!

கட்டுஉடல் நெட்டுமுகம்
சுட்டுவிரல் தொட்டாள்!
பொட்டுநுதல் பட்டுஇதழ்
தொட்டுநல மிட்டாள்!

கெட்டியவள் கட்டிலினில்
தட்டியெனை விட்டாள்!
விட்டகலத் திட்டமிலை
தட்டியெழுப் பிட்டாள்!

சிட்டவளும் எட்டுத்திசை
முட்டகொடி நட்டாள்!
கொட்டுபறை மெட்டியொலி
இட்டமுடன் தொட்டாள்!

பட்டெனவும் விட்டிலெனத்
தொட்டுயிரை விட்டேன்!
வட்டுக்கதிர் தட்டியெனை
வெட்டியெனச் சுட்டான்!

**- அசோகன்**
**விராலிமலை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்தல் இனிது

- நிஷா ரஹ்மான்

உங்களுடைய ஒவ்வோரு நாளையும் புன்னகையுடன் தொடங்கி, அன்பான வார்த்தைகளோடும், நன்றி கூறுதலோடும்தொடர்ந்தீர்களேயானால்.. உங்களுடைய அன்றைய தினம் நிறைவுறும் போது, மனம் அமைதி யாகவும், திருப்திகரமாகவும் உணரக் கூடியதாக இருக்கும்.

ஆமாம்.


உங்களுடைய அன்றாட வாழ் வில்.. ஆயிரம் நிகழ்வுகள், பணிகள், கடமைகள் இருந்த போதும், ஒவ்வொரு நாளையும் எந்த நிலைப் பாட்டில் ஆரம்பிக்கின்றீர்கள் என்ப தில் கவனம் செலுத்தினால் அன்றைய பொழுதின் நிறைவில் மன அமைதி காணலாம்.

உலகில் சராசரி அனைத்து மானிடர்களினதும் அவசியத் தேவை களில் முக்கியமானது ''மன அமைதி'' ஒன்றே.

உலகில் மிகப்பெரிய ஆனந்தம், மற்றவர்களை சந்தோஷப் படுத்தி பார்ப்பது என்பது பொதுவான தொரு கருத்து. அதை நடை முறைப்படுத்த முதலில் நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும்.

உங்களிடம் இல்லாத ஒன்றை உங்களால் எப்படி பிறருக்கு கொடுக்க முடியும்?

ஆக, முதலில் அந்த மனோ பாவத்தை உங்களில் வளர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கள். உங்கள் சிந்தனைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறது. எதை நீங்கள் சிந்திக்கிறார்களோ அது தான் உங்கள் செயலில் வடிவம் பெறுகிறது. சிந்தனை அழகானதாக இருக்குமானால், உங்கள் செயல்களில் அவ்வழகு மிளிரும். வாழ்க்கை முழுவதும் அதனால் அழகாகி விடும்.

அடுத்து,

உங்கள் வாழ்க்கையை நீங்கள் தான் வடிவமைத்துக் கொள்கிறீர்கள்.

அதாவது உங்கள் வாழ்க்கையின் வடிவமைப்பாளர் நீங்கள் தான். வேறு யாரும் அல்ல.

உங்கள் எண்ணங்கள் தான் உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கிறது. உங்கள் விதியை தீர்மானிப்பது நீங்கள் தான். உங்களை வானளவு உயர்த்துவதும், பாதாளத்தில் வீழ்த்துவதும் உங்கள் எண்ணங்களே. உங்கள் எண்ணங்களுக்கு மிகப்பெரிய ஆற்றல் இருக்கிறது.

எதைப்பற்றி நீங்கள் அதிக மதிகமாக சிந்திக்கிறீர்களோ நாளடைவில் அதுவாகவே மாறி விடுவீர்கள். இதுவே "ஈர்ப்பு விதி" எனப்படுவது.

எண்ணங்களுக்கு ஈர்க்கும் ஆற்றல் உள்ளதென்பது கண்டறியப்பட்ட உண்மை.

அதனால் தான் சிந்திக்கும் போது எப்போதும் நல்லனவற்றையே சிந்திக்க வேண்டும் என்பது.

புன்னகை பூக்கும் முகத்துடன், அன்பான அழகிய வார்த்தைகளோடும், நன்றி கூறுதலோடும் உங்கள் நாட்கள் தொடருமானால் வாழ்க்கை எப்போதும் சிறக்கும்.

"இனிது! இனிது!
வாழ்தல் இனிது"

நற்சிந்தனைகள் தொடரும்.

---

# ரென்கா

நடத்தை மாற்றம்
ஏற்படுத்தும் நிலை உண்டா
இன்றைய பள்ளிச்சூழல்.
*
பள்ளிச்சூழல்
வகுப்பறையிலேயேத் தொடர்கிறது
காலை வழிபாடு.
*
வழிபாட்டுக் கூட்டம்
இடைவிடாமல் தொடர்கிறது
காக்கையின் சத்தம்.
*
சத்தமில்லா தியானம்
சுற்றிச் சுற்றி வருகிறது
பட்டாம்பூச்சி.
*
பட்டாம்பூச்சி அமர
சத்தமின்றி நகர்கிறது
சிறுவனின் கால்தடம்.

*
கால்தடத்தின் மேல்
மெல்ல ஊர்ந்து செல்கிறது
வளையிலிருந்த நண்டு.
*
நண்டு ரசம்
ஆங்காங்கே படிகிறது
மஞ்சள் கறை.
*

**- ராஜிலா ரிஜ்வான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயன்றால் கையில் இமயம்



கண்மூடி காணும் கனவு
கலைந்திடும் கலங்காதே_ நீ
கண்திறந்து காணும் கனவு
வாகைச்சூடும் மறவாதே

முடியாதது உன்னால் எதுவுமில்லையே
முயற்சி நீ செய்தால் தவறுமில்லையே
காலம் ஒருநாள் மாறும் பொறுத்திடு
வாழ்வில் வசந்தம் வீசும் உழைத்திடு

கலங்கித் தவிக்காதே
கண்ணீர் வடிக்காதே
சோம்பித் திரியாதே
சோகம் கொள்ளாதே

ஆசையில் பிறந்திடுமே வேட்கை
நம்பிக்கை தானே நம் வாழ்க்கை
உன்னால் எல்லாம் முடியும்
முயன்றால் கையில் இமயம்

கண்மூடி காணும் கனவு
கலைந்திடும் கலங்காதே - நீ
கண்திறந்து காணும் கனவு
வாகைச்சூடும் மறவாதே

விதையில் ஊக்கத்தை விதைத்திடு
வியர்வை நீரை ஊத்திடு
விளைச்சல் வரும்வரை காத்திடு
விளைந்ததும் வெற்றியில் மகிழ்ந்திடு

காலம் மாறிப்போகும் _ நீ
கண்டகாட்சி மாறும்
விண்ணும் உன்னைவியக்கும்_ நீ
விடாமுயற்சி நிறுத்தும் வரைக்கும்

வெண்ணிலவும் உன்னை ரசிக்கும்
விடியல் வாசல்வந்து திறக்கும்
விழித்திரு(ற)ந்தால் போதும்
தென்றல் வந்து மோதும்

கண்மூடி காணும் கனவு
கலைந்திடும் கலங்காதே_ நீ
கண்திறந்து காணும் கனவு
வாகைச்சூடும் மறவாதே

**- சரவிபி ரோசிசந்திரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனக் காதல்

சுவாசமே!
சொல்லிக் காதலிப்பதை விட
சொல்லாமல் காதலிப்பதில் சுகமுண்டு.
அந்த சுகம் இதயத்திற்குச் சுகமான
சுமைதான்.


நீயறியாமல் ரகசியமாய்
உனை ரசிக்கையில்
என் உள்ளத்தில் உண்டாகும் சுகமும்
ரகசியமாயுள்ளதே!

ஆயிரம் ஆசை வார்த்தைகளை
அள்ளிச் சுமந்தபடி
'அன்பே' உன்னருகில் வந்ததும்
எல்லாமே மறக்க
மௌனத்திரைக் கொண்டு
மூடிய வார்த்தைகள்
தொண்டைக்குழிக்குள்
சிக்கித் தவிக்க நான்
ஊமையாய் நிற்கின்றேன்.

தினம் தினமென்னால்
செத்துப் பிழைக்க இயலாது.
நித்தம் என்னுள்
சத்தமின்றி நிகழும்
மௌனயுத்தம்
முற்றுப் பெறவேண்டும்.

எனக்கும் ஒரு மனதுண்டு.
மனதுக்குள் மூடிய
பூவின் வாசனையாய் என்
மௌனக்காதல்.
காதலுக்குள்
வார்த்தையே இல்லாக் கவிதையாய்
மரணம் வரை
என்னுயிரின் சுவாசமாய் ..
ஆழமான என் காதலின்
ஆணிவேராய் 'நீ'

**- ஷேக் நிஸ்ரா**



# காதல் வித்தகி நீ..

பருவக் கிளையசைத்து
பனித்துளியில் தலை நனைத்து
கருடப் பார்வையிலே
கவர்ந்தாயே எனை மெல்ல..

ஓவியனைக் குருடாக்கும்
ஓரவிழிப் பார்வையுந்தன்
பாவியென்னைப் பதம் பார்த்து
பாடையிலே போட்டதடி...

காணக் கிடைக்காத
கற்சிலை போல் நீயிருந்து
காதல் வித்தையினால்
களவாடிச் சென்றதென்ன..

உள்ளக் கதவடைத்து
ஓரமெல்லாம் அரணமைத்து
இதயச் சிறையிலென்னை
இழுத்தடைத்து விட்டாயே..

பூலோகம் நான் மறந்து
புதுவுலகில் வாழ்கின்றேன்
பூமகளே உனதன்பில்
எனைமறந்து போகின்றேன்..

**- கவிக் காதலன் ரசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணமடை திறந்தது

இன்னதடை என்பதனை மறந்து
எத்தனையோ சேர்த்துமனம் நிறைந்து
எண்ணமடை திறந்ததினால் நானும்
எழுதுகிறேன்! எழுத்தூறும் தேனும்!

வண்ணவுடை பெண்ணொருத்தி கண்டு!
வடிவழகை அள்ளிமணம் உண்டு!
பின்னுசடை அரவமெனத் தொங்கும்!
பின்னழகில் என்றனுயிர் தங்கும்!

சின்னயிடைப் பெண்ணழகைத் தாங்கும்!
சிந்தையதைத் தினமெண்ணி ஏங்கும்!
அன்னநடை காட்டிநடம் ஆடும்!
அவளழகைக் குயிலினங்கள் பாடும்

கன்னிவுடல் பொன்னிறத்தைக் காட்டும்!
கவியுள்ளம் கற்பனையை நாட்டும்!
உண்ணத்தடை போடுவதேன் நெஞ்சம்!
உடல்முழுதும் வெப்பநிலை விஞ்சும்!

**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org